**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகள் பயணம் செய்யும் போது ஏற்படும் சிக்கல்களை களைய அரசுச் செயலாளர் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை அவர்களின் தலைமையில் கண்காணிப்புக்குழு அமைத்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.74 நாள்:27–12–2011

மார்கழி 11, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:-

––––

**ஆணை:**

அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகள் பயணம் செய்யும் போது ஏற்படும் சிக்கல்களை களைய குழு ஒன்றை அமைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு சங்கங்கள் மூலம் அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றன.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகள் பயணம் செய்யும் போது ஏற்படும் சிரமங்களை களையவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்வதற்காகவும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் செயலாளர் அவர்களின் தலைமையில், பின்வருமாறு ஒரு குழு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | அரசுச் செயலர்,<br>மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. | தலைவர் |
| 2. | மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர். | செயலர்/ உறுப்பினர் |
| 3. | அரசு முதன்மைச் செயலர்,<br>போக்குவரத்துத் துறை. | உறுப்பினர் |
| 4. | திரு. பால்ராஜ். V,<br>மேலாண்மை இயக்குநர்,<br>மாநகர போக்குவரத்து கழகம், சென்னை. | உறுப்பினர் |
| 5. | திரு. மணி,<br>மேலாண்மை இயக்குநர்,<br>அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்,<br>சென்னை. | உறுப்பினர் |
| 6. | திரு. பூபதி. S,<br>மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,<br>விழுப்புரம். | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 7. | திரு. வி. கணேசன்,<br>மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,<br>சேலம். | உறுப்பினர் |
| 8. | திரு. ப்பி. ப்பி. ராஜேந்திரன்,<br>மேலாண்மை இயக்குநர்<br>தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர். | உறுப்பினர். |
| 9. | திரு. ப்பி. பாண்டியன்,<br>மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம். | உறுப்பினர் |
| 10. | திரு. ஜி. சுவாமிநாதன்,<br>மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை. | உறுப்பினர் |
| 11. | திரு. ஜி. பால்ராஜ்,<br>மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி. | உறுப்பினர் |

3. இவ்வாணை போக்குவரத்துத் துறையின் அ.சா.எண்.19317/B2/2011–1, நாள் 12.12.2011ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அரசு முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை–9.
அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்கள்.
திரு.P. சிம்மச்சந்திரன், தமிழ்நாடு ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு, ஏரிக்கைரை சாலை, கோட்டூர்புரம், சென்னை.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.